MAH05572

ஸ்ரீ :

ஹரி : ஓம் :

பெருமாளுடைய வக்ஷஸ்தலத்துல கௌஸ்துபமா திகழறதுக்கு நாம என்னலாம் செய்யணும் அப்படிங்கறது சொல்றது, கீதையினுடைய சுருக்கம் என்னன்னா, பெருமாளால் ஸ்ருஷ்டிக்கப்பட்டதான ஜீவராசிகள் எல்லாம் மருபடி எங்க போய் சேரணும் பெருமாள் கிட்ட போய் சேரும், பெருமாள் கிட்ட போய் சேர்ரதுக்கு இந்த ஜீவன், அங்கிருந்து தானே வருது, எங்கிருந்து அந்த ஜீவன் வந்துதோ அங்கேயே அந்த ஜீவன் போகப்போறது, நம்ம அதுக்குள்ள என்ன செய்யணும் இந்த இடைப்பட்ட காலத்துல, நான் பெரியவன், நான் படிச்சவன், நான் பெரிய பணக்காரன், எனக்கு தான் எல்லாம் இப்படிங்கற அகங்கார மமகாரத்துல மறைக்கப்பட்றுக்கு, சுத்தமான பரிசுத்தமான இந்த ஜீவன் என்ன பண்ணியிருக்கு அகங்கார மமகாரத்துனால மறைக்கப்பட்றுக்கு, நான் அப்படிங்கறது இந்த சரீரத்துக்குள்ள சரீரம், சரீரத்துக்குள்ள இருக்கற ஜீவன், இந்த சரீரத்தையும் இந்த ஜீவனையும் நடத்தி வெக்கறது ஒரு ஆள் வேணும்ல, சரீரத்துல ஜீவன் இருக்கற முட்டும் சரீரம் என்ன செய்யும், நிமிர்ந்து ஒக்காறும், இப்படி இருக்கும் அப்படி இருக்கும் என்ன வேண்ணாலும் செய்யும், ஆனா இந்த சரீரத்துல இருக்கற உயிர் இருக்கோன்னோ அது பொயிடுத்துன்னா உடனே இந்த சரீரம் என்ன செய்யும் உடனே கீழ விழுந்துடும், அதுக்கு அப்பறம் அந்த சரீரத்துல எந்த அசைவும் இருக்காது, அதுக்கு அப்பறம் அந்த ஜீவன் இல்லாத சரீரம் ஒரு நாழி இருக்கும் இல்லை ஒரு நாள் இருக்கும், அந்த உயிர் இருக்கற முட்டும் அந்த சரீரத்துக்கு சக்தி இருக்கும், நம்ம சரீரத்துல சாதாரணமா உடம்புல இருக்கற எல்லா உருப்புகளும் நல்ல படியா எந்த அடியும் படாம இருந்தா சாதாரணமா இருக்கும். வாசனாதி திரவியங்கள் தடவறதுனால நல்ல வாசனையா இருக்கும். அதே கைல ஒரு புண்ணு வந்து அதுல தண்ணி வடிய ஆரம்பிச்சா நமக்கே அந்த நாத்தம் தாங்கிக்க முடியாது. நம்மாலையே அந்த அழுகிப்போன பகுதில வர நாத்தத்த தாங்க முடியல. அப்ப உயிரோட இருக்கற சரீரத்துலையே எங்கயாவது அடிபட்டு நசுங்கி போச்சுன்னா அதுவே நமக்கு அறுவறுப்பா இருக்கா இல்லையா. ஒரு ராஜா இருந்தான், அந்த ராஜாக்கு ஒரு மந்திரி இருந்தான். அந்த மந்திரி அந்த ராஜாவ பாத்து என்ன சொல்லுவான் எல்லாம் நண்மைக்கே. ஒரு கிராமத்துல குடிசை வீடு எல்லாம் பத்திண்டு எரிஞ்சுது, அப்ப அந்த ராஜா வந்து பாக்கறார், பாத்ததும் அவர்கூட இருந்த மந்திரி என்ன சொல்றார் மக்களை பாத்து, எல்லாம் நண்மைக்கே, ஜனங்களுக்கு பயங்கற கோவம், ராஜாகூட இருக்கறதுனால மந்திரிய ஏதும் பண்ண முடியல, நம்ம கஷ்டப்பட்றோம், எல்லாம் நண்மைக்கேனு சொல்லிட்டு பொயிட்டாறே, ராஜா அரண்மணைக்கு பொயிட்டு உத்தரவு போட்டாறாம், எரிஞ்சு போன எல்லா குடிசை வீட்டையும் எடுத்துட்டு எல்லாம் கல்லு வீடு கட்டி தாங்கோனு சொன்னான், உடனே மக்கள் எல்லாரும் இதுக்கு தான் மந்திரி எல்லாம் நண்மைக்கேனு சொன்னாரா அப்படினு சந்தோஷப்பட்டா. அப்படி எப்ப கேட்டாலும் எல்லாம் நண்மைக்கேனு சொல்லின்டே வரும் போது அசூயை பொறாமை பட்டா, அதுலையே அடுத்த போஸ்டிங், அதே மாதிரி போஸ்டிங் உள்ளவா என்ன செய்வா, பொறாமை பட்டா, பொறாமை பட்டு என்ன செஞ்சா, அந்த நேரத்துல ராஜாக்கு கைல அடிபட்டுது, ரத்தம் வந்து கைல ஸீ புடிச்சு, அப்ப அந்த ராஜாவ பாக்க எல்லாம் நண்மைக்கேனு சொல்ற மந்திரியும் வந்தான், இந்த மந்திரி மேல பொறாமை இருக்கற அந்த அதிகாரியும் வந்தான், வந்ததும் அந்த ராஜா மந்திரி கிட்ட தன் கைய காமிச்சு அடி பட்டுருக்கு என்ன செய்யறதுனு தெரியல அப்படினு சொன்னார், அதுக்கும் அந்த மந்திரி எல்லாம் நண்மைக்கே அப்படினு சொல்லிட்டார், அடுத்து அந்த அதிகாரி ராஜா கிட்ட போய், உங்களுக்கு கைல அடிபட்டிருக்குனு தெரிஞ்சதும் நான் போய் எல்லா கோயில்லையும் பிரார்த்தனை பண்ணிண்டு உங்க கை சரியா போகணும்னு பிரசாதம் கொண்டு வந்திருக்கேனு சொன்னதும் அந்த ராஜா என்ன சொன்னான், நீ இப்படி பிரசாதம்லாம் கொண்டு வந்திருக்க, என் மந்திரிகிட்ட சொன்னா அவர் எல்லாம் நண்மைக்கேனு சொல்றார், உடனே அந்த அதிகாரி, பாத்துகோங்க நீங்க எவ்வளோ இடம் குடுத்துருக்கீங்கனு, உங்கள துச்சமா நினைக்கறார்னு சொன்னார், உடனே ராஜா, யார் அங்கே அப்படினு கூப்டார், கூப்ட்தும் சேவகர்கள்லாம் வந்தா, அவா கிட்ட அந்த மந்திரியை கைது செஞ்சு உடனே சிறைல தள்ளுனு உத்திரவு போட்டுட்டார், உடனே அவர சிறைல அடச்சுட்டா, அதுக்கும் அந்த மந்திரி எல்லாம் நண்மைக்கேனு சொல்லிட்டு உள்ள போயிட்டார், அடுத்து இந்த ராஜா என்ன பண்ணான் உடனே இந்த அதிகாரியை மந்திரி ஆக்கிட்டான், உடனே இந்த அதிகாரிக்கு ரொம்ப சந்தோஷம். ஒரு நாள் இந்த ராஜா வேட்டைக்கு கிளம்பினான், உடனே இந்த புது மந்திரியும் அவர்கூட கிளம்பினான், ராஜா காட்டுல வேட்டைல இருக்கும் போது ஒரு

சிங்கம் வந்துடுத்து, அந்த சிங்கத்து கிட்ட ராஜா மாட்டின்டான், ராஜா மாட்டிண்டதும் அவர் கைல கட்டை விரல்ல அந்த புண்ணு இருக்குல, மிருகங்கள் லாம் வந்து அடிபடாம இருக்கணும், சுத்தமான வஸ்துவதான் சாப்பிடும், அடிபட்டதலாம் மாட்டினா சாப்பட்றதுக்கு வாய்ப்பே இல்லை, அப்ப இந்த ராஜாவோட கை கட்டை விரல் அடிபட்டு கொத கொதனு இருக்கறத இந்த சிங்கம் பாத்ததும் அதுக்கு ஒரு மாதிரி ஆயிடுத்து, உடனே அது அந்த ராஜாவ விட்டுடுத்து, திரும்பி பாத்துது இந்த மந்திரி இருந்தான், இந்த மந்திரி உடம்புல தான் எந்த காயமும் இல்லையே அதுனால அந்த மந்திரி சிங்கத்து கிட்ட மாட்டிண்டு பொயிட்டான், அப்பறம் அந்த ராஜா அங்க வந்தான், வந்து கத்திகூப்டதும் சேவகர்கள்லாம் வந்து சிங்கத்த தொறத்தறதுக்குள்ள அந்த மந்திரியோட உயிரு பொயிடுத்து, அந்த ராஜா என்ன பண்ணான் சேவகர்கள்லாம் கூட்டுண்டு அவனோட நாட்டுக்கு பொயிட்டான், அவனோட நாட்டுக்கு போனதும் அந்த பழைய மந்திரியை பாத்து நடந்த எல்லா விஷயத்தையும் சொல்றான், அதுக்கும் அந்த பழைய மந்திரி எல்லாம் நண்மைக்கேனு சொன்னான், அதுக்கு அந்த ராஜா என்ன அந்த மந்திரி பொயிட்டான்னு சொல்றேன், அதுக்கும் நீ எல்லாம் நண்மைக்கேனு சொல்ரியேனு ராஜா கேட்டான், அதுக்கு அந்த மந்திரி, ஆமாம் அந்த இடத்துல நான் இருந்துருந்தா அந்த சிங்கம் என்ன சாப்டு நான் பொயிருப்பேனே அதுனால தான் எல்லாம் நண்மைக்கேனு சொன்னேன்னு சொல்றான். அப்ப ஒரு சுத்தமான சரீரத்துல எங்கையாவது ஒரு அடி பட்டுதுனா நம்மளாலையே சகிச்சுக்க முடியாது, அதுனால தான் எப்பவுமே நம்ம சரீரத்த சுத்தமா வெச்சுக்கணும்னு சொல்றது. சுத்தமா வெச்சுக்கறதுக்கு தான் நம்ம தினமும் குளிக்கறோம். இந்த உலகத்துல இருக்கற எல்லா ஜீவராஸிகளும் தன்னோட சரீரத்த தண்ணீல முக்கி தன்ன சுத்தமா வெச்சுக்கறது. அப்ப எல்லா ஜீவனும் தன்னோட சரீரத்த சுத்தமா வெச்சுக்க ஜலம் வேணும். ஜலத்த தொடாத ஒரே ஜீவன் பல்லி. இந்த பல்லி ஜலம் சாப்பிடவே சாப்பிடாதுனு வேதத்துல சொல்லியிருக்குனு பெரியவா சொல்லுவா. நம்ம சாப்பட்ற சாப்பாட்டுல ஈ அல்லது எரும்பு விழுந்துட்டா அத எடுத்து போட்டுட்டு சாப்பிடுனு சொல்லுவா, நம்ம எடுத்து போட்டுட்டு சாப்பிடலாம், டீ கடைல டீ குடிக்கும் போது டீ ல ஈ விழுந்துடுத்துனா அத எடுத்து போட்டுட்டு குடிக்கலாம். ஆனா அதே சாப்பாட்டுல ஒரு சின்ன பல்லி விழுந்துட்டா தைரியமா அதை எடுத்து போட்டு சாப்பிட முடியுமானா முடியாது. அப்ப அந்த பல்லிகிட்ட என்ன இருக்குனா அது உடம்பு முழுசும் விஷம். ஏன்னா அது தீர்த்தத்தை தொட்ரதேயில்லை, ஜலம் சாப்பிட்றதே இல்லை, அது ஜலத்த தொடாததுனால அது உடம்பு முழுதும் விஷமா இருக்கு. அப்ப இந்த உலகத்துல சுத்தப்படுத்தறது என்ன ஜலம்.

“ஜலம் பேஷஜம் ஆபயிது வாவுபேஷஜீ : அமீவஜாதநீ : ஆபவா சர்வஸ்ய பேஷஜம்” எல்லாத்துக்கும் அது தான் மருந்து. அதுனால் அந்த பல்லி மருந்துக்கு கூட ஜலத்த சாப்படாததுனால அது உடம்பு முழுசுமே விஷமா மாரிட்றது. ஆகையினால இந்த சரீரம், அதுல இருக்கற உயிர், இந்த சரீரத்தையும் உயிரையும் இயக்கக்கூடியது யாரு, இதெல்லாம் கண்டு பிடிக்கணும், கண்டுபிடிச்சா யார் யாரு எப்படி எப்படி இருக்கணும்ங்கற சூக்ஷ்மத்த தெரிஞ்சுக்கலாம்.